

# ஈரோட்டின் வரலாற்றுப் பயணம்... 26

வீரபாண்டிய மன்னனின் தொழில் தொழில்நுட்ப வல்லுநர்களே வாய்க்கால் வெட்ட முடியாது என்று திரும்பி போய் விட்டார்களாம். இனி எப்படி வாய்க்கால் வெட்டப்போகிறாராம் காலிங்கராயன்... ஆங்காங்கே இப்போது போல அப்போதும் சில புல்லுருவிகள் கூத்தாடிக்கொண்டு இருந்தன. ஆனால் அதற்கெல்லாம் கவனம் செலுத்த காலிங்கராயனுக்கு நேரமும் இலலை ஆர்வமும் இல்லை.

கொங்குவேலா வா நாம் பவானிக்கு புறப்பட்டு போவோம். ஏதேனும் நல்ல வழி கிடைக்கும் என்று தம்பியை அழைக்க... அய்யா நானும் வரேங்க... என்று குடும்ப நாவிதர் சாரங்கனும் புறப்பட்டார்.

இதுவரை எந்த பயணமாக இருந்தாலும் கொங்கு வேலன் அதிகமாக பேச, காலிங்கராயன் குறைவாக பேசிக்கொண்டு வருவார்கள். ஆனால், இந்த பயணம் காலிங்கராயனின் கனவுக்கோட்டையை திறக்கும் புனித பயணம். மண்ணை கீறிக்கொண்டு, விதைகள் முளைக்க வைக்க, தண்ணீர் கொண்டு செல்லும் பகீரத பயணம்.



## ஆற்றை இணைக்கும் வரைபடம் தயாரானது

புராண காலத்தில் கங்கையை தவம் இருந்து மண்ணுக்கு அழைத்து வந்து விட்டனர். குடகில், கமண்டலத்தை கவிழ்த்து காவிரியை உருவாக்கி விட்டார்களாம். எத்தனை சுலபமாக நடந்திருக்கிறது. 39 மைலுக்கு ஒரு வாய்க்கால் வெட்ட எத்தனை சிரமப்பட வேண்டியது இருக்கிறது.

கொங்கு வேலா, ஒன்றை நன்றாக புரிந்து கொள், நாம் பவானியில் இருந்துதான் வாய்க்கால் வெட்டப் போகிறோம். பவானியில் இருந்து கொடுமுடி மிக தாழ்வான மண் அமைப்பு கொண்டது. எனவேதான் பாண்டிய மன்னரின் வல்லுனர்கள் கூட இந்த திட்டம் சாத்தியம் இல்லை என்று கூறிவிட்டார்கள். ஆனால் என் உள்மனம் முடியும் என்று கூறுகிறது. முடியும்... என்று நினைத்தால் அனைத்தும் சாத்தியம்...

வாய்க்கால் வெட்டியே தீருவேன் என்பதை சூசகமாக கூறிக்கொண்டே வந்தார் காலிங்கராயன். எத்தனை பேர் சந்தேகத்தில் இருந்தாலும், கொங்கு வேலனுக்கும், சாரங்கனுக்கும் காலிங்கராயன் வார்த்தைகள் மீது சந்தேகம் வந்ததே இல்லை.

ஏன் அண்ணா அந்த தொழில்நுட்ப வல்லுனர்கள் வாய்க்கால் வெட்ட முடியாது என்று கூறிவிட்டனர். ஆட்கள் நம்மிடம் இருக்கிறார்கள். மண்ணும் நம்முடையது, பின் ஏன் வெட்ட முடியாது? கொங்கு வேலன் கேட்க...

தம்பி, முதலில் கூறினேனே கொடுமுடி பகுதி பவானியை விட தாழ்வாக இருக்கிறது. எனவே வாய்க்கால் வெட்டினால் வெள்ளம் வேகமாகச்சென்று கரைகளை அடித்து விடும். அல்லது பாசனத்துக்கு தேவையாக நாம் பயன்படுத்த முடியாது. அது தான் காரணம்?- காலிங்கராயன் விளக்கினார்.

அப்படி என்றால் நாம் என்ன நேராகவா வாய்க் கால் வெட்டப்போகிறோம்? கொங்கு வேலன் கேள்வி எழுப்பினார்.

என்ன? என்ன கூறினாய்? வேகமாக கேட்டார் காலிங்கராயன். இல்லை அண்ணா நாம் என்ன நேராகவா வாய்க்கால் வெட்டப்போகிறோம் அப்படியே அடித்துக்கொண்டு போக... என்று இழுத்தார் கொங்கு வேலன்.

ஆகா... எனக்கு புரிந்து விட்டது. வாய்க்காலை அதன் போக்குக்கு வெட்ட வேண்டும். ஆங்காங்கே வளைத்து வளைத்து வெட்டினால், வேகம் குறையும். தண்ணீரும் பாசனத்துக்கு பயன்படும். அது... அதுதான் சரி தம்பி, வா... நாம் மீண்டும் ஒரு பயணத்தை தொடர்வோம்.

காலிங்கராயன் வண்டியை வேகமாக ஓட்டும்படிக் கூறினார்.

இப்போது அவருடைய மனசு லேசாக பறந்து கொண்டிருந்தது. அவ்வப்போது கொங்கு வேலனை பார்த்துக் கொண்டார். அண்ணனின் இந்த மகிழ்ச்சி, அன்று அண்ணியை பார்த்து விட்டு வரும்போது கூட இல்லையே என்பதை கொங்கு வேலன் புரிந்து கொண்டார்.

பவானி ஆற்றங்கரையில் சாரங்கனை விட்டு விட்டு, ஒரு குதிரையில் காலிங்கராயனும், இன்னொன்றில் கொங்கு வேலனும் ஏறிக்கொண்டனர். தம்பி நான் கூறும் இடத்தை அப்படியே வரைந்து வா. அதுதான் வாய்க்காலின் வரைபடம் என்றவாறே பயணமானார்கள். (இப்படி புறப்படும் போது, அவர்களின் முன்னால் ஒரு பாம்பு ஓடியதாகவும், அதை பின்தொடர்ந்து சென்று, வாய்க்கால் வளைந்து வளைந்து செல்லும் வகையில் வெட்டியதாகவும் செவி வழியாக கூறப்படுகிறது).

**இது காலிங்கராயனுக்கு கிடைத்த பெரும் வெற்றியாக இருந்தது. அங்கிருந்து ஆவுடையார்பாறை வரை சென்று நொய்யல் ஆறுவரை வாய்க்காலுக்கு வரைபடம் வரைந்து விட்டு திரும்பினார்கள்.**

காலிங்கராயன் முன் செல்ல, அவர் சென்ற பாதையை கொங்கு வேலன் குறித்துக் கொண்டே வந்தார். இறுதியில் கொடுமுடி பண்ணைபுரம் சென்றபோது, தாய் மாமாவின் வீட்டின் நடுவே செல்லும்படியானது. ஏற்கனவே விட்ட பகை, தற்போது தொட்டபகை என பல இருந்தாலும், நல்ல காரியத்துக்காக பூந்துறை நாட்டின் ஆட்சி அதிகாரம் பெற்ற காலிங்கராயன் போட்ட திட்டத்தை மறுக்காமல் ஏற்றுக்கொண்டார்.

இது காலிங்கராயனுக்கு கிடைத்த பெரும் வெற்றியாக இருந்தது. அங்கிருந்து ஆவுடையார்பாறை வரை சென்று நொய்யல் ஆறுவரை வாய்க்காலுக்கு வரைபடம் வரைந்து விட்டு திரும்பினார்கள்.

இந்த பணி நிறைவுற்ற போது மனதில் இன்னொரு மகிழ்ச்சியும் வந்தது. சென்று வந்த இடங்களில் வாய்க்கால்தான் வளைந்து வளைந்து செல்லும். அதே நேரம் இடது பக்கம் மட்டும் கரை அமைத்தால் போதும் என்பதுதான் அது. ஒரு பக்கத்தில் இயற்கையாகவே மண் கரை அமைத்துக்கொடுக்க, இன்னொரு புறம் மண்ணால் கரை அமைத்தால் போதும் என்பதால், செலவும் ஒரு கட்டுக்குள் வரும் என்று நம்பினார் காலிங்கராயன். சாய்வான நிலத்திலும், வெள்ளம் சாய்வின்றி ஓடும். வேகத்துடன் வரும் வெள்ளம் கரையை முட்டி வேகத்தை குறைத்துக்கொள்ளும். இப்படி வாய்க்கால் வெட்டும் முன்பே வரைபடத்தை பார்த்து உள்ளம் மகிழ்ந்தார் காலிங்கராயன். அவருடைய மனதில் இந்த எண்ணம் நிறைவேறும் என்று தீர்மானித்தார். தீர்க்கதரிசிகளுக்கு இது எல்லாம் சாதாரண முடிவு என்றாலும், காலிங்கராயனின் முடிவைப்பார்த்து கொங்கு வேலனுக்கே கொஞ்சம் ஆச்சரியம்தான். 38 மைல் தூரம் வாய்க்கால் வெட்ட திட்டமிட்டபோதே நடக்கவில்லை. இப்போது 56½ மைல்... நடக்குமா என்ற சந்தேகத்தை அப்படியே மனதுக்குள் அடக்கி வைத்துக்கொண்டார். அண்ணன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு எப்போதும் கொங்குவேலனிடம் இருந்து எழுந்ததே இல்லை அல்லவா?...

சரி... வரைபடம் வரைந்தாகிவிட்டது. திட்டம் தயார். ஆனால் எந்த பகுதியில் அணைக்கட்டுவது? பலமுறை காலிங்கராயனின் இதயத்தில் எழுந்து அடங்கி இருந்த கேள்வி இப்போது விஸ்வரூபம் எடுத்து நின்றது. எந்தச்சூழலையும் அசாதாரணமாக கையாளும் காலிங்கராயனுக்கு இது கவலையல்ல... எதிர்கால மக்களுக்கு செய்யப்படும் திட்டமான இந்த வாய்க்கால் திட்டம் எந்த காலத்திலும் பயனற்றதாக போய்விடக்கூடாது என்ற உயர்ந்த நோக்கமாக இருந்தது. எனவே அறிவாற்றலுடன் இறை அருளையும் சேர்த்தே ஒவ்வொரு விஷயத்திலும் ஈடுபட்டார். ஆனால், பவானி ஆற்றின் குறுக்கே எங்கே அணைகட்டுவது என்பதில் சிறு குழப்பம் ஏற்பட்டது.

குழப்பம் தீரவேண்டும் என்றால் மனதில் அமைதி வேண்டும். அமைதி வேண்டும் என்றால், தலை சாய்க்க தாய்மடி வேண்டும். நினைவு வந்ததோ இல்லையோ, கொங்குவேலன் வண்டியோடு வந்து நிற்க... சாரங்கனுடன் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார் காலிங்கராயன். வண்டி கனகபுரம் நோக்கி பயணித்தது.

பயணம் தொடரும்...

# ஈரோட்டின் வரலாற்றுப் பயணம்...27

வழிபார்த்து காத்துக்கிடந்தன தனத்தின் விழிகள். பார்வையில் படும் எல்லையோரத்தில் எங்கே புழுதி பறந்தாலும் அது அவராக இருக்காதா? என்று ஏங்கியது மனம். தினம் தினம் அந்த ஏக்கம் இருந்தாலும், கணவரின் கடமை அறியாத பெண் அல்லவே... காலிங்கராயன் மனத்தை கொள்ளையடிக்கும் சக்தி இருந்தால், அவரின் மன எண்ணங்களையும் அறிந்தவராகத்தானே இருக்க முடியும். மனத்தால் இணைந்த இந்த காதல் பறவை இணை தேடி அல்ல தன் துணை தேடி அன்றாடம் வாசல் பார்த்து காத்திருந்தது.

என்றைக்கும் இல்லாமல் இன்று தனத்தின் உள்ளம் பெரும் உவகையால் துள்ளியது. அந்த துள்ளலின் அர்த்தம் சிறிது நேரத்திலேயே மாட்டு வண்டியின் சலங்கை சத்தத்தில் தெரிந்து போனது. இந்த மனம் பொல்லாததுதான். பார்... இத்தனை நாள் நான் தேடியபோது, சோகமே உருவெடுத்துக்கொண்டு இருந்தது. இப்போது அவர் வருகிறார் என்று தெரிந்து உற்சாக ஆட்டம் போட்டு இருக்கிறதே! ம்...

காலமெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கத்தோன்றும் காலிங்கராயன் வதனத்தை பார்க்க சமையல் கட்டில் இருந்து வாசலுக்கு ஓடினார் தனம்.

ஓடிய கால்கள் வாசல் வந்ததும் வெட்கி அங்கேயே நின்று கொண்டது. வழக்கம் போல அம்மாவின் பாசத்தில் நனைந்து கொண்டிருந்தார் காலிங்கராயர். அம்மாவின் கேள்விகளுக்கு பதில் வந்து கொண்டிருந்தாலும் கண்கள் ரகசியமாக தனத்தை மொய்த்துக்கொண்டிருந்தது. வீட்டுக்கு வந்தவர்களுக்கு தண்ணீர் எடுக்க தனம் உள்ளே போக, தந்தை நஞ்சையரும் வந்து சேர்ந்தார்.

கையில் தண்ணீர் சொம்புடன் வந்த தனத்தை பார்த்ததும், ராசா தோட்டத்தில கொஞ்சம் ஜோலி இருக்கு நாங்க போயிட்டு வரோம்... என்று சுற்றிக்கு நாசுக்காக விடைபெற்றுக் கொண்டார் பாப்பாயி. கருத்தறிந்து அங்கிருந்து நழுவினார் நஞ்சையர். நாங்களும் ஓய்வெடுத்து வருகிறோம் அண்ணா என்றவாறே கொங்கு வேலனும், சாரங்கனும் கிளம்ப... மேற்கு வானம் சிவக்கும்வரை அன்றைய தினம் காதலால் வளர்ந்தது.

அன்று ஏனோ சூரியன் சீக்கிரமாய் எழுந்து விட்டானோ என்று தோன்றியது. இரவு கடந்தது தெரியாமல் உறங்குபவரல்லவே காலிங்கராயன். அதிகாலையிலேயே எழுந்து விட்டார். ஆனால் மனம் இயங்க மறுத்தது. மகனின் இந்த குழப்பமான மனதை பாப்பாயியின் கண்கள் கண்டுபிடித்து விட்டன.

மகனின் குறை இல்லத்தில் இல்லை. உள்ளத்தில் என்பதையும் சட்டென்று யூகித்துக் கொண்ட பாப்பாயி, கணவரை பார்த்தார். அவருக்கு பாப்பாயின் பார்வையின் அர்த்தம் புரிந்தது.

2 பேரும் அருகில் வந்தனர். பெற்றோரை பார்த்ததும் ஏதோ கனவில் இருந்து விடுபடுவது போல எழுந்தார் காலிங்கராயன். என்னப்பா... என்ன யோசனை, அதுதான் போன வேலை எல்லாம் நல்லா நடந்துச்சுல... அப்புறம் என்ன? தந்தையின் குரல் ஆதரவாக இருந்தது. திட்டம் தயாராகி விட்டது அப்பா, ஆனால், இப்போது ஒரு புதிய குழப்பம் ஏற்பட்டு விட்டது. அது தான்.

அது என்ன ராசா... நம்ம ராசா சாமி இருக்கும் போது உனக்கு என்ன கவலை. எல்லா கவலையையும் அவரு பாதத்துல போட்டுரு... அம்மா வேண்டிக்கொண்டார்.

பவானியில் இருந்து நொய்யல்வரை வாய்க்கால் வெட்ட திட்டம் இருக்கு... ஆனா அணைய எங்க கட்டுறது அதுல்ல இப்ப முளைச்சு நிக்குற பிரச்சினை காலிங்கராயன் மனம் வாடிப்போய் கூற... இப்படி அவர் பேசியதை எப்போதும் கேட்டிராத தனம் ஒரு நிமிடம் ஆடிப்போனார்.

நஞ்சையர், இதுக்கா இத்தனை சங்கடம். ராசா... நம்மோட குல தெய்வம் எலவமலை செல்லியாண்டியம்மன் இருக்கும்போது உனக்கு என்ன கவலை. நம்ம சாத்தந்தை குலத்துக்கே அவதானே ராசா தாயி. மனசுல கவலையை விடு... செல்லியாண்டி ஆத்தாகிட்ட கேளு. அவ பூ போட்டு நடக்காத காரியம் உண்டா?... நஞ்சையரின் வார்த்தை காலிங்கராயனுக்கு உற்சாகத்தை கொடுத்தது.

அம்மா பாப்பாயி எலவமலை நோக்கி அம்மா தாயே என்று கரம் உயர்த்தி வணங்கினார். தனம், கழுத்தில் கிடந்த தாலியை கண்களில் ஒற்றிக்கொண்டார்.

தந்தையின் வார்த்தைகள், தாயின் வேண்டுதல், கட்டிய மனைவியின் அன்பு எல்லாம் சேர்த்து காலிங்கராயனின் அனைத்து கவலை எனும் கரையை உடைத்துத்தள்ளி சந்தோஷக்கடலுக்குள் தள்ளியது.

இன்னும் சில திட்டங்கள் தயாரிக்க வேண்டியது இருந்ததால், வீட்டிலேயே இருந்து அந்த பணிகளை மேற்கொண்டார். இதற்கிடையே வாய்க்கால் திட்டம் குறித்த வரைபடத்தையும் அதிகாரிகள் மூலம் மன்னர் வீரபாண்டியனுக்கு அனுப்பி வைத்தார். திட்டத்துக்கு அவருடைய உத்தரவு கிடைத்தபோது சில வாரங்கள் ஓடி இருந்தன. இந்த இடைவெளி காலிங்கராயனுக்கு மகிழ்ச்சியான இடைவெளியாக அமைந்தது. ஒரு நீண்ட பிரிவுக்கு முன்னர் இந்த மகிழ்ச்சியான தருணம் என்பதை அவர்கள் அப்போது தெரிந்திருக்கவில்லை.

போராட்ட வாழ்க்கையின் தொடக்கத்தை, நினைத்துக்கொண்டு இயற்கையின் அழகில் மயங்கும் அழகிய வாழ்க்கையை தொலைக்கவும் விரும்பவில்லை.

தினமும் இரவுகளில் வானத்தில் தோன்றும் நட்சத்திரங்களின் கண் சிமிட்டல்களை ரசித்து, மெய்மறந்து போனார்கள். சில நட்சத்திரங்கள் குறித்து தனம் காலிங்கராயனிடம் கேட்டுத்தெரிந்து கொண்டாள்.

ஒருவேளை அடுத்து வரும் பிரிவின் போது, இந்த நட்சத்திரங்கள்தான் ஆறுதல் தரும் என்று முன்பே தெரிந்து கொண்டாரோ தனம்?.


எப்படியோ, இரவுகளும் பகல்களும் வேகமாக சென்று கொண்டிருக்க, எலவமலை செல்ல வேண்டிய அந்த நாளும் வந்தது.

இதனால் சகல மக்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்...பறையடிக்கும் கிராம ஊழியரின் குரல் ஒலியில், வீட்டில் முடங்கிக்கிடந்த பெரியவர்கள் கூட வீதிக்கு வந்தனர். கூட்டம் கூடியதும் அவர் அறிவிப்பை வெளியிட்டார்.

...சோழ பேரரசின் சண்டிக்குதிரையை அடக்கி, காலிங்கராயன் பட்டம் வென்று. வீரபாண்டிய மன்னனின் அன்புக்கு பாத்திரமாகி, கொங்கு நாட்டின் ஆட்சி அதிகாரம் பெற்ற காலிங்கராயன் எலவமலைக்கு வருகிறார் வருகிறார்...

என்ன நமது காலிங்கராயன் எலவமலைக்கு வருகிறாரா? என்ன இருந்தாலும் பங்காளி வருகிறார் என்கிற போது, ஊரே கொண்டாடத்தானே செய்யும்...

அப்படித்தான் எலவமலை கிராமம் அப்போதே சந்தோஷத்தில் குதூகலிக்கத்தொடங்கியது.



எலவமலையில் உள்ள செல்லியாண்டியம்மன் கோவில்.

## சந்தோசத்தில் எலவமலை கிராமம்...

**நம்மோட குல தெய்வம் எலவமலை செல்லியாண்டியம்மன் இருக்கும் போது உனக்கு என்ன கவலை. நம்ம சாத்தந்தை குலத்துக்கே அவதானே ராசா தாயி. மனசுல கவலையை விடு... செல்லியாண்டி ஆத்தாகிட்ட கேளு. அவ பூ போட்டு நடக்காத காரியம் உண்டா?... நஞ்சையரின் வார்த்தை காலிங்கராயனுக்கு உற்சாகத்தை கொடுத்தது.**

பயணம் தொடரும்...

# ஈரோட்டின் வரலாற்றுப் பயணம்... 28

**எலவமலையில் மக்கள் ஒரு திருவிழாவை எதிர்பார்த்து காத்திருந்தார்கள்.**

செல்லியாண்டியம்மன் கோவில் விசேஷ அலங்காரம் செய்யப்பட்டது. சாத்தந்தை குலத்தினர் அங்கே கூடினார்கள். அவர்களுடன் மாமன்– மாப்பிள்ளைகளும் தங்களை ஆளும் காலிங்கராயனை வரவேற்க தயாரானார்கள்.

அதே நேரம், கனகபுரத்தில் ஒரு மவுன போராட்டம் தொடங்கியது. கனவுபோல சில நாட்கள் கரைந்து விட்டது. கவிதைபோன்ற வாழ்க்கைக்காவியம் தொடங்கியபோது, கடமை என்னும் கட்டளை காலிங்கராயனை தனத்திடம் இருந்து பிரிக்க சூழ்ச்சி செய்தது. காலிங்கராயனின் புத்திக்கூர்மைக்கு முன்பு,



அவர் வீதியில் இறங்கி நடந்து வந்தார். அவருடைய வருகைக்காக கோவில் நடை திறக்கப்பட்டு இருந்தது. சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. காலிங்கராயன் மனதில் தனது கனவை நினைத்தார். அது அங்கே சாமி கும்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் மூலம் அருள்வாக்காக வெளியே வந்தது.

நல்லதொரு நாளில், பூஜை செய்து என் பாதத்து பூ எடுத்து பவானியில் போடு, எங்கே பூ சுழல்கிறதோ அங்கே அணைகட்டு என்று அருள்வாக்கு உரைக்க... மனம் சிலிர்த்த காலிங்கராயன்

## பூப்போட்டு பார்க்கப்பட்டது

எந்த சூழ்ச்சியும் பலிக்காது என்றாலும், இது விரும்பி ஏற்றுக்கொள்ளும் பணி அல்லவா?.... பணி என்று கூறுவது கூட பாவம்... இது விரும்பி ஏற்றுக்கொண்ட தவம். தவத்தின் அஸ்திவாரம் தோண்ட குலதெய்வம் கோவிலுக்கு செல்லவேண்டியது கடமையாகிறது. ஒருவேளை கோவிலுக்கு சென்று விட்டு காலிங்கராயன் திரும்பி வரநேரிடலாம். ஆனால், அதை இப்போது நாம் சொல்ல முடியாது.


இப்போது தாய்–தந்தை, காதல் மனைவி தனம் ஆகியோரிடம் இருந்து காலிங்கராயன் விடைபெறும் தருணம். எத்தனையோ முறை இந்த வீட்டை விட்டு காலிங்கராயனின் கால்கள் எத்தனையோ தேவைகளுக்காக வெளியேறி இருக்கின்றன. ஆனால், இந்த முறை கனகபுரத்தை விட்டு பிரிவது கால்களுக்கு சங்கடமாக தோன்றியது. எப்போதும் முகவாட்டத்தை காட்டாமல் அன்புடன் வழிநடத்தி வரும் பெற்றோர், அவர்களிடம் இருந்து குடும்பம் நடத்தும் கலையை கற்றுக்கொண்ட தனம் ஆகியோர் தங்கள் முகத்தை பார்த்து காலிங்கராயுன் கண்கள் வாடிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனர்.

சூரியன் நடுவானத்தை தொடும் முன்பு கோவிலுக்கு சென்றாகவேண்டும் என்பதால் பிரியா விடை கொடுத்து கனகபுரத்தை பிரிந்தார் காலிங்கராயன். எலவமலை அவருடைய வருகையை எதிர்பார்த்து நின்றது.

மேற்குத்தொடர்ச்சி மலையில் இருந்து பல்வேறு கிளை நதிகளால் உருவாகி, பவானிசாகர் பகுதியில் மோயாற்றை இணைத்துக்கொண்டு, காவிரியை நோக்கி ஓடிவரும் பவானி ஆறு, காவிரியில் கலப்பதற்கு முன்பு இந்த எலவமலை கிராமத்தில்தான் வளைந்து செல்கிறது. சரியாக காவிரி வளைந்து செல்லும் அந்த நேர்கோட்டில்தான் அமைந்திருக்கிறது சாத்தந்தை குலக்கோவில் செல்லியாண்டியம்மன். கோவிலுக்காக பவானி வளைந்து சென்றதா? இல்லை வளைந்து சென்ற இடத்தில் கோவில் அமைக்கப்பட்டதா? என்ற கேள்வி எழும் அளவுக்கு அந்த பூகோள அமைப்பு உள்ளது.

இப்போது பவானியில் அணை கட்ட வேண்டும். அன்னை செல்லியாண்டியின் காலடியில் ஓடும் பவானியில், அணைகட்ட அன்னையிடம்தானே அனுமதி பெற வேண்டும். அதுதான் நஞ்சையரின் வாக்கு, எலவமலைக்கு போ என்று காலிங்கராயனை அழைத்து வந்தது.

வீட்டை பிரிந்த கலக்கம், மக்களைப்பார்த்தபோது கலைந்து போனது. புன்னகை மாறாத அவருடைய இதழ்களை பார்க்க கோடி கண்கள் வேண்டும் என்று மக்கள் ஆசைதீர பார்த்தார்கள். அம்மனை தரிசிக்க



உருகி உருகி பிரார்த்தனை செய்தார். வழி கிடைத்தது. இனி ஆகவேண்டிய வேலையை பார்க்கலாம் என்று உடனே ஊரைவிட்டு கிளம்பவில்லை காலிங்கராயன். அடுத்து ஆக வேண்டிய வேலைகளை அங்கேயே உட்கார்ந்து செய்தார். இதற்காக சில நாட்கள் எலவமலையிலேயே தங்கி இருந்தார்.

குறிப்பிட்ட நாள் நெருங்கியது. பொங்கிவரும் வாணியாற்றில் பரிசல் ஓட்ட யாரும் முன்வரவில்லை. கிராமத்துக்காரர்கள் ஏற்பாடு செய்தவர்கள் தக்க

**நல்லதொரு நாளில், பூஜை செய்து என் பாதத்து பூ எடுத்து பவானியில் போடு, எங்கே பூ சுழல்கிறதோ அங்கே அணைகட்டு என்று அருள்வாக்கு உரைக்க... மனம்சிலிர்த்த காலிங்கராயன் உருகி உருகி பிரார்த்தனை செய்தார்.**

நேரத்தில் தலைமறைவாகி விட்டனர். நேரம் நெருங்கி வருகிறது. பூஜை முடியும் தருவாய், அன்னை பூ கொடுத்து விட்டாள். இனி பவானியில் பூவை விட வேண்டும். அதைத்தொடர்ந்து பின்சென்று பார்க்க வேண்டும். எங்கே அது சுழல்கிறது என்று... யார் வருவார்? கேள்வி துளைத்தபோது, அய்யா நான் வருகிறேன். எனது பரிசல் உங்கள் பாதங்களை தொடுவதற்காக காத்திருக்கிறது என்று பரிசல் ஓட்டி ஒருவர் வணங்கி நிற்க... ஊர்க்காரர்களுக்கே ஆச்சரியம்.

ஆபத்தான பவானி ஆற்றில் பரிசல் விடுகிறேன் என்று தைரியமாக வந்த அந்த பரிசல் ஓட்டியை பரிவுடன் பார்த்த காலிங்கராயன், மகிழ்ச்சியுடன் தட்டிக்கொடுத்தார்.

தாரை தப்பட்டைகள் முழங்க, ஆலய மணி ஒலிக்க பவானியில் பரிசலில் ஏறினார் காலிங்கராயன். கொங்கு வேலனும் உடன் வர, மற்ற பிற வீரர்கள் சிலரும் பரிசலில் பாதுகாப்புக்காக வர எத்தனித்தனர். வேண்டாம். பரிசல்காரர் எங்களை பத்திரமாக அழைத்துச் செல்வார்.

நீங்கள் எங்களுக்காக காத்திருங்கள் என்று கூறிவிட்டு, கம்பீரமாக பரிசலில் அமர்ந்து கொண்டார். பூசாரி, அம்மனை வணங்கி பூவை ஆற்றில் விட, பூவை அடித்துக் கொண்டு வெள்ளம் வேக மெடுத்தது....

பயணம் தொடரும்...